## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
## அ.வ.எண். 26/2013

பெயர் : முத்துசாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 18.02.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடத்திற்குள் வரமுடியாமல் நிழற்குடை கட்டக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். தாவா எ அட்டவணை சொத்தை நான் கடந்த 17.10.2011 தேதியில் வாங்கினேன். மேற்படி சொத்திற்கான மூல ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா எ அட்டவணை சொத்தில் மொத்தம் 4 கட்டிடங்கள் கட்டியுள்ளேன். மேற்படி கடைகளை தவிற சைக்கிள் ஸ்டேண்ட் ஒன்று உள்ளது.

2. 2ம் வாதி சுந்தரம் கடந்த 2018ம் ஆண்டில் இறந்தார். சுந்தரத்தின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 3ம் வாதி வள்ளியம்மாள் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்தார். தேதி நினைவில் இல்லை. வள்ளியம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 4ம் வாதி அம்சாத்தாள் 3 வருடங்களுக்கு முன்பு இறந்தார். தேதி நினைவில் இல்லை. அம்சாத்தாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.18 18:27:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.